

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.7.2024) திருவள்ளூர் மாவட்டம், மப்பேடு கூட்ரோட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில், விழுப்புரம் – கோட்டம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் 3.81 கோடி ரூபாய் செலவில் 8 புறநகர பேருந்துகள் மற்றும் 2 மகளிர் விடியல் பயண நகரப் பேருந்துகள், என மொத்தம் 10 புதிய பேருந்துகளை மக்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், நாடாளுமன்ற உறுப்பினர் சசிகாந்த் செந்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி. ராஜேந்திரன், எஸ். சந்திரன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் த.பிரபுசங்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஊரகப் பகுதிகளில் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளிலும் 2.24 லட்சம் மாணவ - மாணவியர் பயன்பெறும்

# விரிவாக்கப்பட்ட முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூலை 16-

ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் 2,23,536 மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்ட முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், திருவள்ளூர் மாவட்டம், கீழச்சேரி, அரசு உதவி பெறும் புனித அன்னாள் தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாளான நேற்று (15.7.2024) உலகிற்கே முன்னோடியான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விரிவுபடுத்தி தொடங்கி வைக்கும் விதமாக, மாணவ, மாணவியர்களுக்கு காலை உணவு வழங்கி தொடங்கி வைத்தார்.

**முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்!**

“நகரப் பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும் பள்ளிக்குச் செல்லக்கூடிய குழந்தைகள் காலையிலேயே புறப்பட்டு விடுவதால், பெரும்பாலான குழந்தைகள் காலை உணவு சாப்பிடுவது இல்லை என்ற தகவல் அரசுக்கு கிடைத்திருக்கிறது. பள்ளிகள் தூரமாக இருப்பது மட்டுமல்ல, சிலருடைய குடும்ப சூழலும் இதற்கு காரணமாக இருக்கிறது. இதனை மனதில் கொண்டு, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை நேரத்தில் சிற்றுண்டி வழங்கும் திட்டத்தை நாம் தீட்டி இருக்கிறோம். முதற்கட்டமாக சில மாநகராட்சி, நகராட்சிகளிலும், தொலைதூரக் கிராமங்களிலும் இத்திட்டம் தொடங்கப்படும். ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலக்கூடிய தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு அனைத்துப் பள்ளி நாட்களிலும் காலை வேளையில் சத்தான சிற்றுண்டி வழங்கப்படும்” என்று ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவு பெற்றதையொட்டி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 7.5.2022 அன்று முதலமைச்சர் அவர்கள் விதி 110ன் கீழ் அறிவிப்பு வெளியிட்டார்.

**திட்டத்தின் குறிக்கோள்!**

மாணவ, மாணவியர்கள் பசியின்றி பள்ளிக்கு வருதல், ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்படாமலிருத்தல், ஊட்டச்சத்து நிலையை உயர்த்துதல், பள்ளிகளில் மாணவர்களின் வருகையை அதிகரித்தல், வேலைக்குச் செல்லும் தாய்மார்களின் பணிச்சுமையை குறைத்தல் ஆகியவற்றை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் தொடக்கம்!**

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை மதுரை, ஆதிமூலம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் மாணவர்களுக்கு காலை உணவினை பரிமாறி முதலமைச்சர் அவர்கள் 15.9.2022 அன்று தொடங்கி வைத்து, மாணவர்களுடன் உணவருந்தினார்.

**திட்டத்தின் தற்போது வரையிலான செயல்பாடுகள்!**

முதற்கட்டமாக, தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில், இத்திட்டத்தினை செயல்படுத்திட ரூ.33.56 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 1,14,095 மாணவர்கள் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெற்றனர். மேலும், 28.02.2023 முதல் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டு முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட செயலியின் படி 1,005 நகர்ப்புற மையங்களில் 1,12,883 குழந்தைகளும், 963 கிராமப்புற மையங்களில் 41,225 குழந்தைகளும் பயனடைந்து வந்தனர். அதனைத் தொடர்ந்து, 25.8.2023 அன்று நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளையில் நடைபெற்ற விழாவில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் விரிவுப்படுத்தி தொடங்கி வைத்தார்.

தற்போது முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தில், 30,992 அரசுத் தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் சுமார் 18 இலட்சத்து 50 ஆயிரம் அரசுப் பள்ளி மாணவ, மாணவியர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

**மாணவர்கள் - பெற்றோர் வரவேற்பு!**

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மாணவர்களிடமும், பெற்றோர்களிடமும் மிகுந்த வரவேற்புப் பெற்றுள்ளதோடு, சத்தான உணவினை வழங்குவதன் காரணமாக பள்ளிகளில் மாணாக்கர்களின் வருகையும் அதிகரித்துள்ளது. வேலைக்குச் செல்லும் தாய்மார்கள், காலை உணவு தயாரிக்கும் நேரம் மற்றும் பொருட்செலவு மீதமாவதோடு மட்டுமல்லாமல், தங்கள் குழந்தைகளின் ஆரோக்கியம், மகிழ்ச்சி மற்றும் படிப்புத்திறன் அதிகரித்துள்ளதை கண்டு பாராட்டும், மகிழ்ச்சியும் தெரிவித்து வருகின்றனர்.

**கள ஆய்வு வெளிப்பாடு!**

முதலமைச்சரின் காலை உணவு வழங்கும் திட்டம் தொடர்பாக மாநில திட்டக் குழுவினரால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்ட பிறகு அரசுப் பள்ளிகளில் மாணவ, மாணவியர்களின் வருகை அதிகரித்துள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

மாநில மதிப்பீடு மற்றும் செயலாக்கத் துறையினரின் தொடர் ஆய்வு மற்றும் மதிப்பீடுகளில், மாணவர்களிடையே கற்றலில் ஈடுபாடு மற்றும் ஆர்வம் அதிகரித்து கற்றல் திறன் மேம்பட்டுள்ளதுடன், மாணவர்களின் ஊக்கம், கவனிக்கும் திறன் மேம்பட்டுள்ளதாகவும், நேரம் தவறாமை மற்றும் தொடர்வருகை (Regular Attendance) அதிகரித்துள்ளதும் கண்டறியப்பட்டுள்ளது.

ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளுக்கும் விரிவுப்படுத்தப்பட்ட முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

2024-25ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் இயங்கிவரும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் சுமார் 2.50 இலட்சம் மாணவர்கள் பயனடையும் வகையில் வரும் கல்வி ஆண்டு முதல் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவுபடுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, பள்ளிக்கல்வியை மேலும் பரவலாக்கவும், கற்றலை இனிமையாக்கவும், எல்லாக் குழந்தைகளும் பசியின்றி கல்வியறிவு பெற்றிடவும், தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளிலும் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு இந்தத் திட்டத்தினை விரிவுபடுத்தி, கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாடப்படும் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளான 15.7.2024 அன்று திருவள்ளூர் மாவட்டத்தில் தொடங்கி வைக்கப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 4.7.2024 அன்று அறிவித்தார்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, திருவள்ளூர் மாவட்டம், கீழச்சேரி, புனித அன்னாள் தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், ஊரகப் பகுதிகளில் உள்ள 3,995 அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் 2,23,536 மாணவ, மாணவியர்கள் தினசரி பயன்பெறும் வகையில் ஊரகப் பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்பட்ட முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று மாணவ, மாணவியர்களுக்கு உணவுப் பரிமாறி தொடங்கி வைத்தார்கள்.

மேலும், அம்மாணவ, மாணவியர்களுடன் சேர்ந்து முதலமைச்சர் அவர்கள் உணவருந்திய போது, உணவு சுவையாக இருக்கிறதா என்றும், நேரம் தவறாமல், சரியான நேரத்தில் காலை உணவை தினசரி உண்ண வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். முன்னதாக அப்பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படவுள்ள உணவின் தரத்தினை முதலமைச்சர் அவர்கள் சுவைத்து பார்த்து ஆய்வு செய்தார்.

சிறுபான்மை அமைப்பினரால் நடத்தப்படும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவுபடுத்தி செயல்படுத்தியமைக்காக முதலமைச்சர் அவர்களுக்கு கிறிஸ்துவ அமைப்பைச் சேர்ந்த அருட்தந்தைகள், அருட்சகோதரிகள் மற்றும் வாணியம்பாடி முஸ்லீம் கல்வி கழக துணைச் செயலாளர் முகமது நஹீம் மற்றும் இஸ்லாமிய கூட்டமைப்பைச் சேர்ந்தவர்களும் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

முன்னதாக, பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்தநாளையொட்டி, கீழச்சேரி, புனித அன்னாள் தொடக்கப் பள்ளி வளாகத்தில், பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு முதலமைச்சர் அவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

**10 புதிய பேருந்துகள் தொடங்கி வைத்தல்!**

விழுப்புரம் கோட்டம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்திற்கு 2023-24 ஆண்டிற்கு 247 புறநகர பேருந்துகள் மற்றும் 64 நகரப் பேருந்துகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் பழைய பேருந்துகளுக்கு மாற்றாக இதுவரை 134 புறநகர பேருந்துகள் மற்றும் 12 நகர பேருந்துகள் புதிதாக கூண்டு கட்டி தடத்தில் இயக்கப்பட்டுள்ளது. மேலும், தற்போது இப்பகுதி மக்கள் பயனடையும் வகையில் 3.81 கோடி ரூபாய் செலவில் 8 புறநகர பேருந்துகள் மற்றும் 2 புதிய மகளிர் விடியல் பயண நகரப் பேருந்துகள், என மொத்தம் 10 புதிய பேருந்துகளை முதலமைச்சர் அவர்கள் மப்பேடு கூட்ரோட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், நாடாளுமன்ற உறுப்பினர் சசிகாந்த் செந்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி. ராஜேந்திரன், இனிகோ இருதயராஜ், எஸ். சந்திரன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், பள்ளிக்கல்வித் துறை செயலாளர் ஜெ. குமரகுருபரன், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் திருமதி எஸ். திவ்யதர்ஷினி, திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் த. பிரபுசங்கர், முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட ஒருங்கிணைப்பு அலுவலர் க. இளம்பகவத், புனித அன்னாள் சபையின் தலைமை அன்னை சகோதரி கிளாரா வசந்தி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், ஆசிரியர் பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தேனி நாடாளுமன்றத் தொகுதியில் வெற்றி பெற்ற தங்க தமிழ்ச்செல்வன் பெரியகுளம் ஒன்றிய பகுதிகளில் வாக்களித்த பொதுமக்களுக்கு நன்றி தெரிவித்தார். உடன் சரவணகுமார் எம்.எல்.ஏ., வடக்கு ஒன்றியச் செயலாளர் எல்.எம்.பாண்டி, தேவதானப்பட்டி பேரூர் செயலாளர் திலகர், முன்னாள் பேரூராட்சி தலைவர் ஸ்டாலின் குணா, யூனியன் சேர்மன் தங்கவேல், வடக்கு மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் பரமசிவம் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

இதுவரை ரூ.6 கோடியே 3 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

# நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக

## இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி ரூ. 6 கோடியே 3 லட்சத்து 90 ஆயிரம். இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவ உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.2,00,000/– (இரண்டு லட்சம்) 15–07–2024 அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

**நிதி உதவி பெறுவோர் விவரம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | செ.ராஜ்குமார், உ.அம்மாபட்டி ஊராட்சி, உத்தமபாளையம், தேனி மாவட்டம் | – | 25,000/– |
| 2. | எம்.ஒச்சப்பன், மட்டப்பாறை கரட்டூர், நிலக்கோட்டை, திண்டுக்கல் மாவட்டம் | – | 25,000/– |
| 3. | மு.நடேசன், சித்தூர் கிராமம் – அஞ்சல், இராமநாதபுரம் மாவட்டம். | – | 25,000/– |
| 4. | க.சின்னசாமி, கான்சாபுரம், வத்திராயிருப்பு வட்டம், விருதுநகர் மாவட்டம். | – | 25,000/– |
| 5. | கே.எஸ்.செய்யதுமைதீன், குட்டிமூப்பன் தெரு, மேலப்பாளையம், திருநெல்வேலி | – | 25,000/– |
| 6. | ச.உடையார், வ.உ.சி. தெரு, கருங்குளம், திருச்செந்தூர், தூத்துக்குடி | – | 25,000/– |
| 7. | தா.ஜான்ராஜ், இலந்தன்விளை காரங்காடு – அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம் | – | 25,000/– |
| 8. | சு.குணசேகரன், மாரியம்மன்கோவில் தெரு, சந்தைபுதுக்குப்பம், புதுச்சேரி | – | 25,000/– |
| | **மொத்தம்** | | **ரூ.2,00,000/-** |

கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து

# தமிழ்நாடு முதல்வர் சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்!

## அறந்தாங்கியில் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேச்சு!

*புதுக்கோட்டை, ஜூலை16 -*

*தமிழ்நாடு முதல்வர் அவர்கள் மாணவ, மாணவிகள் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்ற அடிப்படையில் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து சிறப்பாக திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள் என அறந்தாங்கியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசிய போது குறிப்பிட்டார்.*

*புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி, தாலீப் திருமண மஹாலில், பள்ளிக் கல்வித்துறையின் சார்பில், அரசு/நகராட்சி/ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு, கையடக்கக் கணினிகளை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் 12.07.2024 அன்று வழங்கினார்.*

*பின்னர் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தெரிவித்த தாவது:-*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணவ, மாணவிகள் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்ற அடிப்படையில் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில் மாணவ, மாணவிகளுக்கு தேவையான திறன் வகுப்பறைகள், உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வகங்கள், அகண்ட வரிசை இணையதள வசதி உள்ளிட்ட பல்வேறு கல்வி சார்ந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.*

*அதன்படி அரசு / நகராட்சி / ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு, கையடக்கக் கணினி கள் வழங்கப்பட்டுள்ளது.*

*அதன் அடிப்படையில், மாணவ, மாணவிகளிடையே மாறிவரும் கற்றல், கற்பித்தல்*



*முறைகளுக்கேற்ப ஆசிரியர்கள் தங்களை மெருகேற்றிக் கொள்வதற்கு அனைத்து அரசு / நகராட்சி / ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு வழங்குவதற்கு கையடக்கக் கணினி மாநிலத் திட்ட இயக்குநர் அலுவலகத்திலிருந்து புதுக்கோட்டை மாவட்டத்திற்கு 3,274 எண்ணிக்கையில் பெறப்பட்டுள்ளது.*

*இதில் அறந்தாங்கி கல்வி மாவட்டத்தில் 472 அரசு தொடக்கப்பள்ளிகள் மற்றும் 143 அரசு நடுநிலைப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு 1,438 கையடக்கக் கணினி (TAB) வழங்கப்படுகின்றது.*

*மாநில திட்ட இயக்குநர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட கையடக்கக் கணினி (TAB) அறந்தாங்கி மாவட்டக் கல்வி அலுவலகம் (தொடக்கக் கல்வி) நிர்வாகத்தின் கீழ் செயல்படும் அறந்தாங்கி வட்டார கல்வி அலுவலகத்திற்கு 323 எண்ணிக்கையிலும், அரிமளம் வட்டார கல்வி அலுவலகத்திற்கு 178 எண்ணிக்கையிலும், ஆவுடையார்கோவில் வட்டார கல்வி அலுவலகத்திற்கு 180 எண்ணிக்கையிலும், கறம்பக்குடி வட்டார கல்வி அலுவலகத்திற்கு 257 எண்ணிக்கையிலும், மணமேல்குடி வட்டார கல்வி அலுவலகத்திற்கு 181 எண்ணிக்கையிலும், திருவரங்குளம் வட்டார கல்வி அலுவலகத்திற்கு 319 எண்ணிக்கையிலும் மொத்தம் 1,438 எண்ணிக்கையில் கையடக்கக் கணினிகள் இன்றைய தினம் வழங்கப்பட்டுள்ளது.*

*எனவே மாணவ, மாணவியர்கள் கல்வியில் சிறந்து விளங்கிட ஆசிரியர்கள் அனைவரும் இந்த கைய டக்கக் கணினிகளை பயன்படுத்தி சிறப்பாக கல்வி பயிற்றுவிக்க வேண்டும் எனவும் அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தெரிவித்தார்.*



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் மாவீரன் அழகுமுத்துக்கோன் 314வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. மலர்தூவி மரியாதை செய்தார். உடன் முன்னாள் எம்.எல்ஏ.சுப.மதியரசன்,, இளையான்குடி பேரூராட்சி மன்றத் தலைவர் பி.ஏ.நஜ்மூதீன், துணைத் தலைவர் இபுராகீம்,ஏ.ஆர்.பி.முருகேசன் மகளிரணி இந்துமதி திருமுருகன், வே.கருணாகரன், கண்ணன், புவியரசு, கோபி ஆகியோர் மரியாதை செலுத்தினார்கள்.